## Consolidation

- There are many insects in the world.
- A dragon fly is a proud insect.
- It teases all other insects like butterfly,ant, ladybug, bumblebee, beetle.
- A hungry chameleon walks quietly and catches the dragonfly for his lunch.

## Evaluation

- We can evaluate students by these simple and think-able questions like,
  1. What colour is the dragonfly?
  2. What is the ant carrying?
  3. Also use activities given on page no. 94

LESSON 2.3

# THE INSECTS

## Learning Outcomes :

- Read the story 'The boy and the butterfly'
- Answer using 'Here it is'
- Use in, on under, and near in a sentence
- Ask questions with "where"

## Materials Needed :

- Picture cards, charts
- Models of insects
- Computer, mobile, speaker for QR code videos

## Teacher Contact Time:

### Motivation

- The teacher can motivate by asking questions or sing the rhymes related to the topic
  1. Recall the insects
  2. Recall the dragonfly story
  3. Recall the Incy wincy spider rhyme

### Content Transaction:

- The teacher reads the lesson once and let the students to read the lesson one by one in the page no. 101
- Use activities given on page no.98, 99, 103

# ✦ Students Activity Time:

## Per Group Activities :

- The teacher helps the students to present their activities
- Also encourage the students to work in pairs
- Use activities given on page no. 98

## Individual Activities :

- The teacher helps the students to present their activities.
- Use activities given on page no. 99,100,102

## Reinforcement

- Explain the topic once again
- Use topic related videos and QR code videos to reinforce the students.

## HomeWork

- Ask the students to know about lady bug given on page no. 102

**This may help your teaching process**

## Concept Map



## Consolidation

- Sam is a good boy.
- One day he saw a butterfly with cover.'
- He is ready to cut the cover. But his grandpa refused.
- But he cut the cover.
- The butterfly was not able to fly.
- Grandpa said that if the butterfly cut its cover on its own, then only, it will fly.
- Sam realized.

## Evaluation

- We can evaluate students by these simple and thinkable questions like,
  1. What is the name of the boy?
  2. What did he see?
  3. What did he do?

  Also use activities given on page no. 104, 105 for evaluation.

LESSON 3.1

LESSON PLAN

# THE WORLD AROUND US

## Learning Outcomes :

- Name the different landforms
- Recite the poem " Beauty of the nature"
- Describe landforms
- Read the words from the word wall

## Materials Needed :

- Picture cards, charts
- Models of different land forms
- Computer, mobile, speaker for QR code videos

## ✦ Teacher Contact Time:

### Motivation

- The teacher can motivate by asking questions or sing the rhymes related to the topic
  1. Nila's house is located near the mountain. Where is yours?
  2. Do you know about oasis?

### Content Transaction:

- The teacher reads the lesson once and let the students to read the lesson one by one in the page no. 108-110
- Use activities given on page no.115

# ✦ Students Activity Time:

## Per Group Activities :

- The teacher helps the students to present their activities.
- Also encourage the students to work in pairs
- Use activities given on page no. 115

## Individual Activities :

- The teacher helps the students to present their activities.
- Use activities given on page no. 115

## Reinforcement

- Explain the topic once again
- Use topic related videos and QR code videos to reinforce the students.

## HomeWork

- Ask the students to write the poem "Beauty of the Nature" given on page no. 110.

## Consolidation

- There are many landforms in our Earth.
- Mountains are so high and Valleys are so deep.
- Plains are flat like mat.
- Islands are surrounded by water.
- Deserts have sand.
- Oceans have sea water.
- Earth is a beautiful planet.

## This may help your teaching process

## Concept Map




## Evaluation

We can evaluate students by these simple and thinkable questions like,

- What is called island?
- What is called glacier?
- Write about oceans.

Also use activities given on page no. 124 for evaluation.

LESSON PLAN

LESSON 3.2

# THE WORLD AROUND US

## Learning Outcomes :

- Name the different landforms
- Use structure would you please?”
- Say and read words with ‘ ir’ and ’ur’
- Read the words from the word wall

## Materials Needed :

- Picture cards, charts
- Models of different land forms
- Computer, mobile, speaker for QR code videos

## ✦ Teacher Contact Time:

### Motivation

The teacher can motivate by asking questions or sing the rhymes related to the topic

- Which is called ‘ship of the desert’?
- Hare you seen the camel?
- How does it look like?

### Content Transaction:

- The teacher reads the lesson once and let the students to read the lesson one by one in the page no. 111-113
- Use activities given on page no.116,117

# ✦ Students Activity Time:

## Per Group Activities :

- The teacher helps the students to present their activities.
- Also encourage the students to work in pairs
- Use activities given on page no. 116, 117

## Individual Activities :

- The teacher helps the students to present their activities.
- Use activities given on page no. 114

## Reinforcement

- Explain the topic once again
- Use topic related videos and QR code videos to reinforce the students.

## HomeWork

- Ask the students to write the words from word wall given on page no. 117.

**This may help your teaching process**

## Concept Map



## Consolidation

**Camel's body**

- Camel's have 2 long legs and toes. Long legs loosen the sand to walk and toes protect from hot sand.
- Camel has long eyelashes. It keeps its eyes safe from strong winds.
- Camels have hump to store the food.
- Camel's hard skin protects it from thorny plans, hot sun and cold night.
- These features help the camel to live in desert.

## Evaluation

We can evaluate students by these simple and thinkable questions like,

- Why does camel have long legs?
- How does camel save food?
- How does it save from thorny plants?

Also use activities given on page no. 124 for evaluation.

LESSON
3.3

LESSON PLAN

# THE WORLD AROUND US

## Learning Outcomes :

- Read the story "the river and the hill"
- Use "the" in sentences.
- Ask questions with 'who' and answer it.

## Materials Needed :

- Picture cards, charts
- Models of different land forms
- Computer, mobile, speaker for QR code videos

## ✦ Teacher Contact Time:

### Motivation

The teacher can motivate by asking questions or sing the rhymes related to the topic

- Do you see the river?
- Where does the river come from?
- Where does it go?

### Content Transaction:

- The teacher reads the lesson once and let the students to read the lesson one by one in the page no. 120-121
- Use activities given on page no.118, 123

# ✦Students Activity Time:

## Per Group Activities :

- The teacher helps the students to present their activities.
- Also encourage the students to work in pairs
- Use activities given on page no. 119

## Individual Activities :

- The teacher helps the students to present their activities.
- Use activities given on page no. 122

## Reinforcement

- Explain the topic once again
- Use topic related videos and QR code videos to reinforce the students.

## HomeWork

- Ask the students to colour the landform given on page no. 122

**This may help your teaching process**

## Concept Map



## Consolidation

- The hill and the river
- The river was sad to run all the time
- One day it asks the hill its wish.
- The hill said it saw the same scenes everyday. But it helped many lives there.
- But the river sees new scene everyday. Just help in your own way.
- Then the hill and the river are happy.

## Evaluation

We can evaluate students by these simple and thinkable questions like,

- Why the river was sad?
- What did the hill say?

Also use activities given on page no. 124 for evaluation.



## பாடத்திட்டக் கையேடு

# கணக்கு

# வடிவியல்

## கற்றலின் விளைவுகள்:

- இரு பரிமாண வடிவங்களை வரையும் திறன் பெறல்.
- முப்பரிமாண பொருள்களை வரையும் திறன்
- இரு பரிமாண முப்பரிமாண வடிவங்களின் பண்புகளைக் கூறுதல்.

## துணைக்கருவிகள்:

- இருபரிமாண வடிவங்கள்
- முப்பரிமாண வடிவங்கள்

# ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

## ஆயத்தப்படுத்துதல்

- பந்து, மெழுகுவர்த்தி, கோமாளித்தொப்பி, புத்தகம், எண்கட்டை ஆகிய உருவங்களின் பெயர்களைக் கூறச் செய்தல். மேற்கூறிய பொருள்களை மேலிருந்து பார்க்கும் போது தெரியும் இரு பரிமாண வடிவங்களை கூறச் செய்தல்.
- இது போன்று விளையாட்டு பாடல் மற்றம் புதிர்கள் மூலம் ஆயத்தப்படுத்தலாம்.

போன்ற முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத்தொடர்பான பாடல் பாடி / வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

## கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- இரு பரிமாண மற்றும் கன உருவங்களைக் காண்பித்து பெயரைக் கூறுதல்.
- பக்க எண் 2-ல் உள்ள பாடக் கருத்தின் படி ஆசிரியர் இரு பரிமாண உருவங்களை வரைந்து காட்டுதல்.

- ஒவ்வொரு உருவத்தின் வேறுபட்ட பண்புகள் (நீளம், அகலம், பக்கம், முனைகள்) ஆகியவற்றை விளக்கிக் கூறுதல்.
- இரு பரிமாண மற்றும் முப்பரிமாண வடிவங்களை வரையக் கற்றுத்தரல்.

## ✦மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- பக்க எண் 7-ல் உள்ள பயிற்சியினை சிறு குழுவாகப் பிரிந்து செய்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- பக்க எண் 8 மற்றும் 9-ல் உள்ள பயிற்சியினைச் செய்தல்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்துப் புரிந்து கொண்ட கருத்தைக் கூறச் செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- முக்கோணத்திற்கு உள்ள முனைகள் எத்தனை?
- உருளைக்கு எத்தனை பக்கங்கள் உள்ளது?

போன்ற வினாக்களின் மூலம் வலுவூட்டுதல்.

- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில் புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

### வீட்டுப்பாடம்

- காகிதங்கள், அட்டைகளைக் கொண்டு கனசதுரம் கனசெவ்வகம் கூம்பு உருளை போன்ற உருவங்களைச் செய்து வரச் செய்தல்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### மதிப்பிடுதல்:

- கோளம் ________________ பரப்பு கொண்டது.
- கனசதுரத்திற்கு ________________ முகங்கள் உள்ளன .
- முனைகள் இல்லாத முப்பரிமாண வடிவம் எது ?

போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்

பாடம் 1.2

# வடிவியல்

## கற்றலின் விளைவுகள்:

- ➢ டேன்கிராம் பற்றி அறிதல்.
- ➢ தளநிரப்பிகள் பற்றி அறிதல்.
- ➢ அன்றாட வாழ்வில் தளநிரப்பிகளின் பயன்பாடு பற்றி அறிதல்.

## துணைக்கருவிகள்:

- ➢ பல வண்ண தாள்களில் செய்யப்பட்ட டேன்கிராம் உருவங்கள்.

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- ➢ சமதள வடிவப் பொருள்களைக் காட்டி, அதில் அமைந்துள்ள வடிவத்தைக் கூறச் செய்து ஆயத்தப்படுத்தலாம்.
- ➢ மேலும் முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத்தொடர்பான பாடல் பாடி , வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- ➢ பக்க எண் 13-ல் உள்ள பாடக்கருத்தின்படி டேன்கிராம் கொண்டு மாறுபட்ட உருவங்களை எவ்வாறு உருவாக்குதல் என விளக்குதல்.

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- ➢ பக்க எண் 14-ல் உள்ள பயிற்சியில், உருவங்களில் உள்ள டேன் கிராம் எத்தனை உள்ளது என எண்ணி எண்ணிக்கை எழுதுதல்.
- ➢ குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- பக்க எண் 15-ல் உள்ள பயிற்சியினைச் செய்து வரச் சொல்லுதல்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்து கொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

## வலுவூட்டுதல்

- டேன் கிராம் கொண்டு உருவங்கள் உருவாக்குதலை மீண்டும் ஒரு முறை விளக்கிக் கூறுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில் புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

## வீட்டுப்பாடம்

- டேன் கிராம் பயன்படுத்தி உருவங்களை செய்து வரக் கூறுதல்.

**உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்**

## கருத்து வரைபடம்



## மதிப்பிடுதல்:

பயிற்சி கணக்குகளை மதிப்பீட்டிற்கு பயன்படுத்தலாம் .

- துளநிரப்பி என்றால் என்ன ?
- டேன்கிராம் என்பது ______________ நாட்டுப் புதிர்.
- சதுர தள நிரப்பி வரைக..

போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 2.1

பாடத்திட்டக் கையேடு

# எண்கள்

## கற்றலின் விளைவுகள்:

- இடமதிப்புகளைப் பயன்படுத்தி 999 வரை உள்ள எண்களைப் படித்தல் மற்றும் எழுதுதல்.
- எண்களின் இடமதிப்பிற்கு ஏற்ப 999 வரை உள்ள எண்களை ஒப்பிடுதல்.

## துணைக்கருவிகள்:

- எண் அட்டைகள் , மணிகள், மணிக் கோர்வைகள்
- QR Code களின் வீடியோக்களைப் பார்த்து மகிழ கணினி இணைப்பு
- மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப மற்றும் பல துணைக்கருவிகள்.

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

**ஒன்று முதல் ஒன்பது வரை ! ஓரிலக்க எண்களாம் (2)**
**பத்து முதல் 99 வரை ! ஈரிலக்க எண்களாம் (2)**
**ஓரிலக்கம், ஈரிலக்கம் ! நன்கு அறிந்த பின்னரே (2)**
**மூன்றிலக்க எண்கள் அறிய ! ஆர்வமுடன் வந்தோமே (2)**

என்ற பாடலைப் பாடி மாணவர்களை ஆயத்தப்படுத்தலாம்.
மேலும் முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத் தொடர்பான பாடல் பாடி, வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- (பக்க எண் 19ல்) மூன்றிலக்க எண்களின் இடமதிப்பை விளக்குதல்.

- (பக்க எண் 20) ஆணிமணிச்சட்டத்தின் மூலம் மூன்றிலக்க எண்களை அடையாளம் காணச் செய்தல்.
- (பக்க எண் 21) 1 முதல் 999 வரையுள்ள எண்ணுருவின் எண் பெயர்கள் அறியச் செய்தல்.

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- பக்கம் எண் 17 மற்றும் 18-ல் உள்ள எண் பெயர்களை எழுதுதல் மற்றும் விடுபட்ட எண்களை எழுத வைத்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- பக்க எண் 22ல் உள்ள பயிற்சியில் எண்ணுருவிற்கு ஏற்ப எண் பெயர்களை எழுதக் கூறுதல்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- இடமதிப்பு, விடுபட்ட எண்களை எழுதுதல், மற்றும் எண் பெயர்களை எழுதுதல் ஆகியவற்றுக்கு சில கணக்குகளைக் கொடுத்து விடையை எழுதிக் காட்டச் சொல்லுதல்.
- எளிய வினாக்கள் கேட்டு மீண்டும் பாடப் பகுதியை வலுவூட்டுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

## வீட்டுப்பாடம்

- 101 முதல் 999 வரை எண் பெயர் எழுதி வரச் செய்தல்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

## கருத்து வரைபடம்

மூன்றிலக்க எண்கள் அறிமுகம்

- விடுபட்ட எண்கள் எழுதுதல்
- ஈரிலக்க எண்களின் எண் பெயர்கள
- 100 என்ற எண்ணின் இட மதிப்பை அறிதல்
- 100 எண் அறிமுகம்

## மதிப்பிடுதல்:

- 2 3 4 – இதன் எண் பெயர். ______________________
- 4 5 6 – இல் 5ன் இடமதிப்பு ____________________
- 3 பத்துகள், 6 நூறுகள், 4 ஒன்றுகள் கொண்ட எண் ________________

போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடத்திட்டக் கையேடு

பாடம் 2.2

# எண்கள்

## கற்றலின் விளைவுகள்:

- ஒற்றை எண்கள் இரட்டை எண்கள் அறிதல்.
- ஒற்றை எண்ணும் இரட்டை எண்ணும் அடுத்தடுத்து வரும் என அறிதல்
- மூன்றிலக்க எண்களைத் தாவித் தாவி எண்ணும் திறனைப் பெறுதல்

## துணைக்கருவிகள்:

- எண் அட்டைகள், மணிகள், மணிக் கோர்வைகள்
- QR Code களின் வீடியோக்களைப் பார்த்து மகிழ கணினி இணைப்பு
- மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப மற்றும் பல துணைக்கருவிகள்.

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

**ஒன்றாய் சேர்ந்து நின்றிடுவோம் - ஒற்றை எண்கள் எழுதிடுவோம்**
**1, 3, 5 மற்றும் 7, 9 எண்களுமே - ஒற்றை எண்களாய் கணக்கிடுவோம்**
**இனிதாய் சேர்ந்து ஆடிடுவோம். - இரட்டை எண்கள் எழுதிடுவோம்**
**2, 4, 6, 8, 0 எண்களுமே - இரட்டை எண்களாய் கணக்கிடுவோம்**
**பிரிக்க முடிந்த எண்களையே - இரட்டை எண்களாய் கருதிடுவோம்**
**முயன்றும் பிரிக்க முடியாததை - ஒற்றை எண் என்று புரிந்திடுவோம்.**

என்ற பாடலைப் பாடி மாணவர்களை ஆயத்தப்படுத்தலாம்.
போன்ற முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத் தொடர்பான பாடல் பாடி / வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

## கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- (பக்க எண் 23, 24, 25ல்)
- குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்களைச் சமமாக இரு குழுக்களாக பிரிக்கும் போது மாணவர்கள் மீதம் ஆகாவிட்டால் இரட்டை எண் எனவும் மீதமானால் ஒற்றை எண் எனவும் விளக்கிக் கூறல்.
- மாணவர்கள் வெவ்வேறு எண்களுக்கேற்ப மணிகளை இரு சம பாகங்களாகப் பிரித்து இக்கருத்தினை விளக்கிக் கூறல்.

# ✦மாணவர் செயல்பாடுகள்:

## குழுச் செயல்பாடுகள்

- பக்கம் எண் 23, 24-ல் உள்ள பயிற்சியினை சிறு குழுக்களாகப் பிரிந்து செய்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- பக்க எண் 25ல் ஒற்றை எண் இரட்டை எண்களை வேறுபடுத்தி வண்ணம் தீட்டுதல்.
- பக்க எண் 25ல் ஒற்றை இரட்டை எண்களை அடையாளம் கண்டு வட்டமிடுதல்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்துப் புரிந்துகொண்ட கருத்தைக் கூறச் செய்யலாம்.

## வலுவூட்டுதல்

- 3 என்ற எண்ணிக்கு அடுத்து வரும் எண் எது? ஒற்றை எண்ணா? இரட்டை எண்ணா?
- ஓர் இரட்டை எண்ணைத் தொடர்ந்து வரும் எண் எது? போன்ற வினாக்களின் மூலம் பாடக்கருத்தை மாணவர்களுக்கு வலுவூட்டலாம்.

- எளிய வினாக்கள் கேட்டு மீண்டும் பாடப் பகுதியை வலுவூட்டுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

## வீட்டுப்பாடம்

- 50 முதல் 100 வரையுள்ள எண்களில் ஒற்றை, இரட்டை எண்களை தனித்தனியாக எழுதி வரக் கூறல்.

**<u>உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்</u>**

## கருத்து வரைபடம்




## மதிப்பிடுதல்:

- 20 – 30 எண்ணிற்க்கு இடைப்பட்ட ஒற்றை எண்களைக் கூறுக.
- 40 – 50 எண்ணிற்க்கு இடைப்பட்ட இரட்டை எண்களைக் கூறுக.
- 3, 6,9, 12 , _______ , ________ , ________

போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 2.3

# எண்கள்

## கற்றலின் விளைவுகள்:

- எண்களை ஒப்பிடும் திறன் பெறுதல்.
- எண் கோட்டை பற்றி அறிதல்.
- இலக்கங்களின் எண்ணிக்கையைக் கொண்டு ஒப்பிடும் திறன் பெறல்.
- சம இலக்கங்கள் கொண்ட எண்களை ஒப்பிடும் திறன் பெறல்.

## துணைக்கருவிகள்:

- மணிகள், எண், அட்டைகள் , < > = குறியீடு அட்டைகள்.
- QR Code களின் வீடியோக்களைப் பார்த்து மகிழ கணினி இணைப்பு
- மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப மற்றும் பல துணைக்கருவிகள்.

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- வகுப்பில் இரு மாணவர்களை அழைத்து ஒருவரிடம் 5 பேனாக்களும் மற்றொரு மாணவரிடம் 2 பேனாக்களும் கொடுத்து யாரிடம் அதிக பேனாக்கள் உள்ளது எனக் கேட்டு ஆயத்தப்படுத்தல்.

முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத் தொடர்பான பாடல் பாடி / வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- எண் கோட்டைப் பயன்படுத்தி எண்களை ஒப்பிட்டு விளக்குதல் (பக்க எண் 26).
- மூன்றிலக்க எண்களை ஒப்பிட்டு விளக்குதல் (பக்க எண் 27).

- சம இலக்கங்களை ஒப்பிடும் போது அவற்றின் இடமதிப்பைக் கொண்டு ஒப்பிட வேண்டும் எனக் கூறுதல் பக்க எண் (28)
- ஏதேனும் இரு எண்களை ஒப்பிட்டு அதற்கு பொருத்தமான குறியீடுகளைக் குறித்து விளக்குதல் (பக்க எண் 28)

## ✦மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்து பக்க எண் 28-ல் உள்ள பயிற்சியை செய்யச் சொல்லுதல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- பக்க எண் 29ல் உள்ள பயிற்சியை மாணவர்கள் செய்தல்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- 97, 106 என்ற இரண்டு எண்களில் எது பெரியது?
- சரியான குறியீட்டை எழுதுக $100 + 50 + 6$ ______ $200 + 30 + 0$
- இதன் மூலம் மாணவர்களை வலுப்படுத்தல்.
- எளிய வினாக்கள் கேட்டு மீண்டும் பாடப் பகுதியை வலுவூட்டுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனைத் தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

### வீட்டுப்பாடம்

- பக்க எண் 30-ல் உள்ள பயிற்சியைச் செய்து வரக் கூறல்.
- பக்க எண் 31-ல் உள்ள பயிற்சியைச் செய்து வரக் கூறல்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### மதிப்பிடுதல்:

பொருத்தமான குறியிடுக :

- 345 ________ 456
- 543 ________ 345
- 450 ________ 450

போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 2.4

# எண்கள்

## கற்றலின் விளைவுகள்:

- மூன்றிலக்க எண்களில் இனமாற்றமின்றி கூட்டலை அறிதல்.
- ஆணிமணிச்சட்டத்தைப் பயன்படுத்தும் திறன் பெறல்.
- கூட்டற்பலன் 999க்கு மிகாமல் கூட்டல் அறிதல்.
- மணிக்கோர்வையைக் கொண்டு கூட்ட அறிதல்.

## துணைக்கருவிகள்:

- ஆணிமணிச்சட்டம்
- மணிக்கோர்வைகள்
- QR Video

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- கணித மேதை இராமானுஜம் அவர்களைப் பற்றி சிறு கதை கூறி ஆயத்தப்படுத்தலாம்.
- முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத்தொடர்பான பாடல் பாடி / வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- பக்க எண் 32-ல் உள்ள கணக்கை மணிக் கோர்வை கொண்டு விளக்கலாம்.
- பக்க எண் 32-ல் உள்ள கணக்கை ஆணிமணிச்சட்டம் மூலம் விளக்குதல்.

# ✦மாணவர் செயல்பாடுகள்:

## குழுச் செயல்பாடுகள்

- பக்க எண் 32-ல் உள்ள பயிற்சியை குழுக்களாகப் பிரிந்து செய்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- பக்க எண் 33-ல் உள்ள பயிற்சியினை செய்தல்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்து கொண்ட கருத்தை கூறச் செய்யலாம்..

## வலுவூட்டுதல்

- ஏதேனும் மாணவனை எழுப்பி 421 + 325 என்ற கணக்கினை ஆணிமணிச் சட்டத்தில் கூட்டச் செய்து வலுப்படுத்துதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில் புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

## வீட்டுப்பாடம்

- பக்க எண் 34ல் உள்ள பயிற்சியைச் செய்து வரக் கூறல்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### மதிப்பிடுதல்:

கூட்டல் செய்க

- 45 + 54 = ____________
- 345 + 234 = ____________
- 18 + 89 = ____________
- 267 + 398 = ____________

போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 2.5

# எண்கள்

## கற்றலின் விளைவுகள்:

- மூன்றிலக்க எண்களின் இனமாற்றமின்றி கழித்தல் அறிதல்.
- மூன்றிலக்க எண்களின் இன மாற்றத்துடன் கழித்தல் திறன் பெறல்.
- மனக்கணக்குகள் செய்யும் திறன் பெறல்.
- வாழ்க்கை கணக்குகளில் இரண்டு அல்லது மூன்று படிநிலைகள் கொண்ட கழித்தல் கண்க்குகள் அறிதல்

## துணைக்கருவிகள்:

- மணிக் கோர்வைகள்
- ஆணிமணிச்சட்டம்
- எண் அட்டைகள்

## ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

**கழித்தல் கணக்கைச் செய்திடவே கவனமுடனே கழித்திடலாம்**
**இலக்க எண்கள் அறிந்திடலாம்**
**பெரியது சிறியது உணர்ந்திடலாம்**
**பெரியதில் சிறியதை கழித்திடலாம்**
**நேர்வழி கழித்தல் என்றிடலாம்**
**சிறியதில் பெரியதில் கழித்திடவே**
**இனத்தை மாற்றிச் செய்திடலாம்**
**நாளும் கணக்கினை ஆக்கிடலாம்**
**நலமுடன் வாழ்ந்து உயர்ந்திடலாம்**

என்ற பாடலைப் பாடி ஆயத்தப்படுத்தலாம்.
முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத்தொடர்பான பாடல் பாடி, வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

## கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- பக்க எண் 35-ல் உள்ள கழித்தல் செயல்பாட்டை ஆணிமணிச் சட்டம் மூலம் விளக்குதல்.
- பக்க எண் 36-ல் உள்ள கழித்தல் செயல்பாட்டை மணிக்கோர்வைகள் மூலம் விளக்குதல்.

# ✦ மாணவர் செயல்பாடுகள்:

## குழுச் செயல்பாடுகள்

- பக்க எண் 32-ல் உள்ள பயிற்சியினை குழுக்களாகப் பிரிந்து செய்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- பக்க எண் 36-ல் உள்ள பயிற்சியினைச் செய்தல்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்து கொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

## வலுவூட்டுதல்

ஒரு கிரிக்கெட் மட்டையின் விலை ரூ.825 உன்னிடம் ரூ.598 உள்ளது எனில் கிரிக்கெட் மட்டையை உன்னால் வாங்க இயலுமா? காரணம் கூறு இதைப் போன்ற வாழ்க்கை கணக்குகளை கூறி வலுவூட்டலாம்.

- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில் புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

## வீட்டுப்பாடம்

- பக்க எண் 37ல் உள்ள பயிற்சியை செய்யச் சொல்லுதல்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### மதிப்பிடுதல்:

- 98 - 54 = ______________
- 345 - 234 = ______________
- 97 - 89 = ______________
- 789 - 398 = ______________

போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 3

# அமைப்புகள்

## கற்றலின் விளைவுகள்:

- எளிய வடிவங்கள் மற்றும் எண்களின் அமைப்பு முறைகளை அறிதல்.
- சமச்சீர் கோட்டினைப் பற்றி அறிதல்.
- நேர்கோடுகள் மூலம் வடிவங்கள் வரைதல்.

## துணைக்கருவிகள்:

- எளிய வடிவம் உள்ள வண்ணத் தாள்கள்
- QR Code Video

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- ஒவ்வொரு மாணவரிடமும் அவரவர் வீடு அமைந்திருக்கும் இடத்தின் அடையாளங்களைக் கூறச் செய்தல்.
- முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத்தொடர்பான பாடல் பாடி / வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- பக்க எண் 46-ல் உள்ள அமைப்புகளின் வகைகளை விளக்கிக் கூறுதல்.
- எளிய வடிவங்களைக் கொண்டு எண் அமைப்புகளை உருவாக்கும் முறைகளை கூறல்.
- பக்க எண் 52-ல் உள்ள சமச்சீர் உருவங்களின் பண்புகளைக் கூறி விளக்குதல்.

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- பக்க எண் 47-ல் உள்ள பயிற்சியினை செய்யக் கூறல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- பக்க எண் 49, 50 பயிற்சியினைச் செய்யக் கூறுதல்.
- பக்க எண் 53-ல் உள்ள சமச்சீர் உருவங்களை நிறைவு செய்யக் கூறுதல்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்து கொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- எளிய வடிவங்களைக் கொண்டு அமைப்பு முறையை உருவாக்கச் சொல்லுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில் புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

### வீட்டுப்பாடம்

- பக்க எண் 55-ல் உள்ள பயிற்சியினை செய்து வரக் கூறல்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### மதிப்பிடுதல்:

➢ வளரும் அமைப்புகளை தொடர்க.

a.  ____________

b.  ____________

➢ சுமச்சீர் தன்மை இல்லாத ஆங்கில எழுத்துகளை எழுதுக.

போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 4

# அளவீடுகள்

## கற்றலின் விளைவுகள்:

- மீட்டர், மில்லிமீட்டர், சென்டிமீட்டர் அளவைகளை அறிதல்.
- மீட்டர் அல்லது சென்டிமீட்டர் போன்ற திட்ட அலகுகளைப் பயன்படுத்தி நீளம் மற்றம் தொலைவினைத் தோராயமாகக் கணக்கிடல்.
- அளவிடுதல் மற்றும் அவற்றிக்கிடையேயுள்ள தொடர்புகளைக் கண்டறிதல்.

## துணைக்கருவிகள்:

- அளவுகோல்
- டேப்
- QR Code

# ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

## ஆயத்தப்படுத்துதல்

- மாணவர்களை வகுப்பறையின் நீள அகலங்களை பாதங்கள் மூலம் அளந்து எத்தனை பாதங்கள் எனக் கூறச் சொல்லி ஆயத்தப்படுத்தலாம்.
- முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத்தொடர்பான பாடல் பாடி / வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

## கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

(பக்க எண் 57)

- அளவீடுகளுக்கு திட்ட அலகுகள் எதனால் தேவைப்படுகிறது என விளக்குதல். வகுப்பு மேஜையினை ஏதேனும் ஐந்து மாணவர்களைக் கொண்டு அவர்களின் கையினைக் கொண்டு அளக்கச் சொல்லுதல் பின்பு ஒவ்வொரு மாணவர்களுக்கும் வேறுபட்ட அளவினை வருவதைக் கொண்டு திட்ட அலகுகளின் முக்கியத்துவத்தைப் புரிய வைத்தல்.

- மீட்டர், மில்லிமீட்டர், சென்டிமீட்டர் அளவுகளை விளக்கிக் கூறுதல்.

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- பக்க எண் 58-ல் உள்ள பயிற்சியினை குழுக்களாகப் பிரிந்து செய்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- பக்க எண் 60, 61 உள்ள பயிற்சியினைச் செய்து வரச் கூறல்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்து கொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- 100 சென்டிமீட்டர் (cm) = 1 மீட்டர் (m) என்ற கருத்தை வலுவூட்டுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில் புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

### வீட்டுப்பாடம்

- பக்க எண் 63-ல் உள்ள பயிற்சியை செய்து வரச் செய்தல்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### மதிப்பிடுதல்:

- 100 செ.மீ = ____________ மீட்டர்
- திட்ட அலகுகளைக் கூறுக.
- மில்லி மீட்டரின் சுருங்கிய வடிவம் __________________

போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 5.1

# காலம்

## கற்றலின் விளைவுகள்:

- கடிகாரம் வரையும் திறன்.
- கடிகாரத்தைப் பார்த்து நேரத்தை கணக்கிடும் திறன்.

## துணைக்கருவிகள்:

- கடிகாரம்
- QR Code

# ஆசிரியர் செயல்பாடுகள்:

## ஆயத்தப்படுத்துதல்

**டக் டக் கடிகாரம்**
**தட்டு நிறைய பனியாரம்**
**குட்டி குட்டி சுண்டெலி**
**எட்டி எட்டி பார்த்ததாம்**
**டாண் டாண் கடிகாரம்**
**தாவி கரும்பூனை வந்ததாம்**
**கண்டு மிரண்ட சுண்டெலிகள்**
**காற்றாய் பறந்து ஓடினவாம்**

என்ற பாடல் மூலம் மாணவர்களை ஆயத்தப்படுத்தல்
முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத்தொடர்பான பாடல் பாடி / வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

## கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- பக்க எண் 66 உள்ள படங்களின் மூலம் மாணவர்களுக்கு பகல் இரவு மாற்றத்தைக் கூறல்.

- பக்க எண் 67 கடிகாரத்தில் உள்ள இரு முற்களைப் பற்றிக் கூறி அது நேரத்தைக் குறிக்கும் முறையைக் கூறுதல்.
- கடிகாரம் பார்த்து நேரம் சொல்ல கற்றுத் தருதல்.

## ✦மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- பக்க எண் 68-ல் உள்ள பயிற்சியினை சிறு குழுக்களாகப் பிரிந்து செய்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- பக்க எண் 70-ல் உள்ள பயிற்சியினைச் செய்தல்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்து கொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

### வலுவூட்டுதல்

கடிகாரம் பார்த்து நேரம் கணக்கிடும் முறையை மீண்டும் விளக்கிக் கூறுதல்.

- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில் புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்

### வீட்டுப்பாடம்

- கடிகாரம் வரைந்து வரக் கூறுதல்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### மதிப்பிடுதல்:

- மணி 3 க்கு கடிகாரம்




- கடிகாரம் பார்த்து மணி கூறுக




போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடத்திட்டக் கையேடு

பாடம் 5.2

# காலம்

## கற்றலின் விளைவுகள்:

- நாட்காட்டியில் ஒரு குறிப்பிட்ட நாள் மற்றும் கிழமையை அடையாளம் காணுதல்.
- வார நாள்கள் அறிதல்.
- மாதங்கள் அறிதல்.

## துணைக்கருவிகள்:

- நாள்காட்டி

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

**திங்கட்கிழமை தக்காளி**
**செவ்வாய்க்கிழமை சிறுகீரை**
**புதன்கிழமை வாழைக்காய்**
**வியாழக்கிழமை வெண்டைக்காய்**
**வெள்ளிக்கிழமை கத்திரிக்காய்**
**சனிக்கிழமை சுண்டக்காய்**
**ஞாயிறு கேரட் பீட்ரூட்**
**வார நாட்கள் ஏழாகும்**
**காய்கறி உணவே மருந்தாகும்.**

என்ற பாடல் மூலம் ஆயத்தப்படுத்தல்

முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத்தொடர்பான பாடல் பாடி , வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- வார நாள்களை கூறுதல்.

- 12 மாதங்களின் பெயர்களைக் கூறச் செய்தல்.
- லீப் வருடம் எவ்வாறு கண்டறிதல் என்பதையும் விளக்குதல்.

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- பக்க எண் 73-ல் உள்ள பயிற்சியினை சிறு குழுவாகப் பிரிந்து செய்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- பக்க எண் 74-ல் உள்ள பயிற்சியினைச் செய்தல்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்துப் புரிந்து கொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- குடியரசு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
- ஆசிரியர் தினம் எந்த மாதத்தில் வருகிறது?

போன்ற வினாக்களைகேட்டு வலுவூட்டுதல்.

- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில் புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

### வீட்டுப்பாடம்

- பக்க எண் 72-ல் உள்ள பயிற்சியினைச் செய்து வரக் கூறுதல்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### மதிப்பிடுதல்:

- வார நாள்களின் பெயர்களைக் கூறுக.
- இந்த மாதத்தில் எத்தனை புதன்கிழமை வருகிறது என்பதை மாதக்காட்டி பார்த்து கூறுக.
- லீப் வருடம் எனில் __________________ மாதத்தின் நாட்களின் எண்ணிக்கை மாறுபடம்.

போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 6

# தகவல் செயலாக்கம்

### கற்றலின் விளைவுகள்:

- தரவு சேகரித்தல்
- கோடுகளைப் பயன்படுத்துதல்.
- அத்தரவுகளைப் படங்களாகக் குறித்துக் காட்டுதல்.
- முடிவுகளைப் பெறுதல்

### துணைக்கருவிகள்:

- படங்கள், QR Video's

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- வண்ணப் பந்துகளை மாணவர்களுக்குக் காண்பித்து, பந்துகளின் வண்ணங்களைக் கூறச் செய்தல்.
- முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத்தொடர்பான பாடல் பாடி / வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- பக்க எண் 76-ல் உள்ள படங்களைக் காண்பித்து தரவுகளை விளக்குதல். பின்பு அதை வகைப்படுத்திக் கூறல்.
- பக்க எண் 77-ல் உள்ள பழங்கள், காய்கறி பயிற்சியினை கொண்டு தரவுகளை விளக்குதல்.

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- பக்க எண் 77-ல் உள்ள பயிற்சியினை குழுக்களாகச் செய்தல்.

- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- பக்க எண் 78-ல் உள்ள பயிற்சியில் தரவுகளுக்கு ஏற்ப வண்ணமிடுதல்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்து கொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

## வலுவூட்டுதல்

- ஏதேனும் 5 எழுத்துகள் உள்ள பழங்களின் பெயரைக் கூறுக.
- உனது பெயரிலுள்ள எழுத்துகளை எண்ணிக் கூறுக.

போன்ற வினாக்களின் மூலம் வலுவூட்டுதல்.

- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில் புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

## வீட்டுப்பாடம்

- 4 எழுத்துகள் உடைய விலங்குகளின் பெயர்களை எழுதி வரக் கூறுதல்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### மதிப்பிடுதல்:

- 3 , 4 , 5 என்ற எண்களைப் பயன்படுத்தி மூன்றிலக்க எண்களைக் கூறுக.
- உங்கள் பெயரில் “a”. என்ற எழுத்துக்கள கொண்டவர்கள் யார் யார்?
- நம் வகுப்பிலுள்ள மாணவிகளின் எண்ணிக்கை

போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.



பாடத்திட்டக் கையேடு

# அறிவியல்

பாடம் 1.1

# எனது உடல்

## கற்றலின் விளைவுகள்:

- கை கழுவுதலின் நன்மைகளை அறிதல்.
- தன் சுத்தம் குறித்து உணர்ந்துக் கொள்ளுதல்.
- கழிவறைகளைப் பயன்படுத்துதல் மற்றும் திறந்தவெளியில் மலம் கழித்தலைத் தவிர்க்கும் பழக்கத்தை வளர்த்தல்.
- புலனுறுப்புகளைப் பாதுகாத்தல

## துணைக்கருவிகள்:

- கை கழுவும் முறை கொண்ட சுழலட்டை, மின்னட்டை.
- QR Code களின் வீடியோக்களைப் பார்த்து மகிழ கணினி இணைப்பு முதலியன

# ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

## ஆயத்தப்படுத்துதல்

1. உனது தலை எது?
2. உனது உடலை எப்படி பாதுகாப்பாய்?

போன்ற முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத் தொடர்பான பாடல் பாடி, வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

## கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- கை கழுவும் முறையை ஆசிரியர் செய்து காட்டி பின் மாணவர்களைச் செய்ய வைத்தல்.
- கழிப்பறையைப் பயன்படுத்தும் முறையை கலந்துரையாடல் மூலம் விளக்குதல்.
- குளித்தல் மற்றும் புலனுறுப்புகளை பாதுகாத்தல் – காணொளி வழி

காண்பித்து உற்றுநோக்கி கலந்துரையாடி விளக்குதல். தேவையெனில் மீண்டும் மீண்டும் வாசித்தும், பாடியும் காட்டலாம். தொடர்ச்சியாக மாணவர்களை பின்தொடரச்செய்தல்.

## ✦மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- கை கழுவும் முறை கொண்ட மின்னட்டைகளை அடுக்கச் சொல்லுதல்.
- புலனுறுப்புகளைப் பாதகாத்தல் பற்றி சிறு நாடகம் நடிக்கச் செய்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாகப் பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- ஒரு வெள்ளைத்தாளில் கையை வைத்து அதன் ஓரங்களை பென்சிலால் வரையவும். பின் அதில் கிருமிகளை வரைந்து வண்ணம் தீட்டவும்.
- பக்க எண் 95ல் உள்ள சரி அல்லது தவறு எழுதுக.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- எளிய வினாக்கள் கேட்டு மீண்டும் பாடப் பகுதியை வலுவூட்டுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

### வீட்டுப்பாடம்

- பக்கம் 102ல் உள்ள செயல்திட்டம்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### மதிப்பிடுதல்:

- உலக கை கழுவும் தினம் அக்டோபர் 15
- உலக கழிப்பறை தினம் நவம்பர் 11
- உலக சுகாதார தினம் ஏப்ரல் 11
- ஒலி அளவானது டெசிபல் (dB) அலகால் அளக்கப்படுகிறது.
- 85 டெசிபலுமமர மேற்பட்ட எந்த ஒலியும் ஆபத்து ஆகும்.

போன்ற எளிய & சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்

பாடம் 1.2

# எனது உடல்

## கற்றலின் விளைவுகள்:

- நல்ல தொடுதல் மற்றும் கெட்ட தொடுதலைப் பற்றிய விழிப்புணர்வு பெறுதல்.
- உடல் மற்றும் புலனுறுப்பு சவால் (குறைபாடு) உடையவர் களுக்கு உதவும் மனப்பான்மையை வளர்த்தல்.
- உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தை அறிதல்

## துணைக்கருவிகள்:

- மின்னட்டைகள் நல்ல தொடுதல் கெட்ட தொடுதல் படம், எளிய உடற்பயிற்சிகள் கொண்ட படங்கள்.

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- கண் காது வாய் மூக்கு கொண்ட படங்களைக் கொண்டு அதன் முக்கியத்துவத்தைப் பேசுதல்.
- நல்ல தொடுதல் கெட்ட தொடுதல் படங்களைக் காண்பித்து, கலந்துரையாடல் மூலம் விளக்குதல்.
- மாற்றுத்திறனாளிகள் யார் யார் என்பதையும் அவர்களுக்கு எவ்வாறு உதவ வேண்டும் என்பதையும் எளிய நடையில் விளக்குதல்.
- உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தை உடற்பயிற்சி செய்து காட்டி விளக்குதல்.
- போன்ற முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத் தொடர்பான பாடல் பாடி, வினாக்கள் கேட்டு ஆயத்தப் படுத்தலாம்.

## கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- கை கழுவும் முறையை ஆசிரியா் செய்துக்காட்டி, பின் மாணவா்களைச் செய்ய வைத்தல்.
- கழிப்பறையைப் பயன்படுத்தும் முறையை கலந்துரையாடல் மூலம் விளக்குதல்.
- குளித்தல் மற்றும் புலனுறுப்புகளைப் பாதுகாத்தல் காணொளி வழி காண்பித்து உற்றுநோக்கி கலந்துரையாடி விளக்குதல்.
- தேவையெனில் மீண்டும் மீண்டும் வாசித்தும், பாடியும் காட்டலாம்.
- தொடர்ச்சியாக மாணவா்களைப் பின்தொடரச்செய்தல்.

# ✦மாணவா் செயல்பாடுகள்:

## குழுச் செயல்பாடுகள்

- பக்கம் 99 உள்ள கலந்துரையாடல்.
- பக்கம் 100 உள்ள உடற்பயிற்சியின் முக்கியத்துவம்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாகப் பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபா் செயல்பாடுகள்

- பக்கம் 99ல் உள்ள பொருத்துக.
- பக்கம் 101ல் உடல்திறன் சாா்ந்த சொற்களைக் கண்டறிந்து, வட்டமிடுக.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்துப் புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

## வலுவூட்டுதல்

மாணவா்களை இரு குழுக்களாகப் பிரித்து அதில் ஒரு குழுவானது நல்ல தொடுதல் மற்றொரு குழு தீயதொடுதல் மற்றும் தொடாதிருத்தல் ஆகியவற்றைக் கூற வைப்பதன் மூலம் பாடக் கருத்தை வலுவூட்டலாம்.

எளிய வினாக்கள் கேட்டு மீண்டும் பாடப் பகுதியை வலுவூட்டுதல்.

- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code

காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

## வீட்டுப்பாடம்

- நீ எவ்வாறு மாற்றுத்திறனாளிக்கு உதவுவாய் என்று எழுதிவரச் சொல்லுதல்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

## கருத்து வரைபடம்




## தொகுத்தல்

- நல்ல தொடுதல், தீய தொடுதல் கருத்துகள் மாற்றுத் திறனாளிக்கு உதவுவதல், உடற்பயிற்சி பற்றி மீண்டும் ஒரு முறை தொகுத்துக் கூறுதல்.

## மதிப்பிடுதல்:

- தொடுதலின் வகைகளை எழுதுக.
- உனது பாதுகாப்பு வட்டத்திற்குள் இல்லா ஒருவர் உன்னைத் தொட்டால் நீ என்ன செய்வாய்?
- மாற்றுத் திறனாளிக்கு எவ்வாறு உதவுவாய்?
- உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தைக் கூறு..

பாடத்திட்டக் கையேடு

பாடம் 2.1

# பருப்பொருள்களின் நிலைகள்

## கற்றலின் விளைவுகள்:

- நம்மைச் சுற்றியுள்ள பொருள்களைப் பற்றி அறிதல்.
- திண்ம, திரவ, வாயு பொருள்களுக்கு இடையேயான வேறுபாட்டை அறிதல்.

## துணைக்கருவிகள்:

- திட, திரவ, வாயு உண்மைப் பொருள்கள், மின்னட்டைகள். QR code – வீடியோ.

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- முன்னர் நடத்திய பாடத்தில் இருந்து சிறு வினாக்கள் கேட்டல்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- நிறை என்பதையும் திண்ம, திரவ, வாயுப் பொருள்களின் நிலைகள் மற்றும் பண்புகளை உண்மைப் பொருட்கள் காண்பித்து உற்று நோக்கல் முறையில் விளக்குதல்.
- தேவையெனில் மீண்டும் மீண்டும் வாசித்தும், பாடியும் காட்டலாம்.
- தொடர்ச்சியாக மாணவர்களைப் பின்தொடரச்செய்தல்.

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- 104ல் உள்ள பருப்பொருள் நிலைகள் மற்றும் பண்புகள் கலந்துரையாடல். மூன்று குழுக்களாகப் பிரித்துக் கலந்துரையாடல்.

- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாகப் பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- பக்கம் 107ல் உள்ளதை நிரப்புக.
- பக்கம் 108ல் அட்டவணையைப் பூர்த்தி செய்க.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

## வலுவூட்டுதல்

- பாடக் கருத்தினை எளிய முறையில் கூறி மீண்டும் விளக்குதல்.
- எளிய வினாக்கள் கேட்டு மீண்டும் பாடப் பகுதியை வலுவூட்டுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

## வீட்டுப்பாடம்

- பக்க எண் 113ல் உள்ள என்னைக் கண்டுபிடி.

**உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்**

## கருத்து வரைபடம்



## தொகுத்தல்

- திண்மம், திரவம், வாயுவின் பண்புகளை மீண்டும் ஒரு முறை கூறி அதன் மையக் கருத்தை விளக்குதல்.

## மதிப்பிடுதல்:

**சரியா, தவறா எனக் குறிப்பிடுக:**

- பருப்பொருள் திண்மம், திரவம், வாயு ஆகிய மூன்று நிலைகளில் உள்ளன.
- திண்மம் குறிப்பிட்ட வடிவம் கொண்டது.
- திரவத்திற்கு குறிப்பிட்ட வடிவம் இல்லை.
- பெரும்பாலான வாயுக்களுக்கு நிறம் இல்லை
- பாத்திரத்தின் வடிவத்திலேயே இருப்பது திரவம்.

# பருப்பொருள்களின் நிலைகள்

## கற்றலின் விளைவுகள்:

- பருப்பொருள்களின் பண்புகளை உற்றுநோக்கி அறிதல்.
- பொருள்களின் இயல்புகளை விவரித்தல்.
- எளிய சோதனைகள் செய்துப் பார்த்தல்.

## துணைக்கருவிகள்:

- பொருத்தட்டை, மின்னட்டை, உண்மைப் பொருள்கள்.

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- திட, திரவ, வாயு மின்னட்டைகளைக் கொண்டு ஒவ்வொரு மாணவராக அதனைப் பற்றிக் கூறச் செய்தல்.
- முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத் தொடர்பான பாடல் பாடி, வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- பருப் பொருள்களின் நிலை மாற்றங்களைச் செய்துக் காட்டியும், உற்றுநோக்கல் முறையிலும் விளக்குதல்.
- திண்ம, திரவ, வாயு நிலையில் உள்ள எரிபொருள் பற்றி கலந்துரையாடல் மூலம் விளக்குதல்.
- தேவையெனில் மீண்டும் மீண்டும் வாசித்தும், பாடியும் காட்டலாம்.
- தொடர்ச்சியாக மாணவர்களைப் பின்தொடரச்செய்தல்.

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- பக்க எண் 109ல் உள்ள சிந்தித்து விடையளி.
- ஏன் குளிர்காலத்தில் தேங்காய் எண்ணெய் உறைந்து விடுகின்றது என்பதை பற்றிய கலந்துரையாடுதல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாகப் பாடக்கருத்தை வழங்கச்செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- பக்கம் 109ல் உள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.
- பக்கம் 111ல் உள்ள பொருத்துக.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- மாணவர்களுக்கு பருப்பொருள் நிலை மாற்றம் மற்றும் வெப்பப்படுத்துவதற்கு பயன்படும் அல்லது பயன்படாத பொருள்கள் பற்றி மீண்டும் கூறி விளக்குதல்.
- எளிய வினாக்கள் கேட்டு மீண்டும் பாடப் பகுதியை வலுவூட்டுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்து கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

### வீட்டுப்பாடம்

- எரிபொருள் பற்றிய செய்தித்தாள்கள் தொகுப்பு சேகரித்து வரவும்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்

| | | | |
|---|---|---|---|
| திண்மம் திரவம் | திரவம் வாயு | திரவம் திண்மம் | வாயு திரவம் |



| | | | |
|---|---|---|---|
| **உருகுதல்** | **ஆவியாதல்** | **உறைதல்** | **தொகுத்தல்** |

### தொகுத்தல்

➢ பாடக்கருத்துகளை மீண்டும் ஒரு முறை கூறித் தொகுத்தல்.

### மதிப்பிடுதல்:

**வரையறு:**

1. திண்மம் : ______________________
2. திரவம் : ______________________
3. உருகுதல் : ______________________
4. ஆவியாதல் : ______________________
5. உறைதல் : ______________________

# விசை

## கற்றலின் விளைவுகள்:

- எளிய இயக்கம் மற்றும் செயல்களைப் பற்றி அறிதல்.
- விசையை வரையறுத்தல்.
- தள்ளுதல் செயல் மூலம் நடைபெறும் வேலைகளைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்ளுதல்.
- இழுத்தல் செயல்கள் மூலமாக வேலை நடைபெறுவதை மாணவர்கள் அறிந்து கொள்ளுதல்

## துணைக்கருவிகள்:

- தள்ளுதல் செயல் நடைபெறும் பல்வேறு படங்கள்
  இழுத்தல் செயல் நடைபெறும் பல்வேறு படங்கள், வகுப்பறைப் பொருள்கள் (மேசை, நாற்காலி), கதவை தள்ளுதல் முதலியன.

# ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

## ஆயத்தப்படுத்துதல்

வேலை அம்மா வேலை
வேலை அப்பா வேலை
அம்மி இழுத்து அரைத்து
சுவையாய் உணவு சமைத்து
கிணற்றில் நீரை இறைத்து
துணியை நன்றாய் துவைத்து
நன்றாய் படிக்க வைத்து
அன்பாய் வளர்க்கும் அம்மா
அறிவை புகட்டும் அப்பா
அன்பாய் வாழ்வோம் அனைவருமே

மேற்காணும் பாடல் மூலம் ஆர்வமூட்டலாம்.
முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத் தொடர்பான பாடல் பாடி, வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

## கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- இயக்கம், விசை என்பதை செய்து காட்டி விளக்குதல்.
- தள்ளுதல், இழுத்தல் செயல் நடைபெறும் போது பொருள்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்கிறது என்பதை பல்வேறு படங்கள் காண்பித்து உற்று நோக்கல் மூலம் கற்பித்தல்.
- தேவையெனில் மீண்டும் மீண்டும் வாசித்தும், பாடியும் காட்டலாம்.
- தொடர்ச்சியாக மாணவர்களைப் பின்தொடரச்செய்தல்

# ✦ மாணவர் செயல்பாடுகள்:

## குழுச் செயல்பாடுகள்

- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து ஒரு குழுவை இழுத்தல் பற்றியும் மற்றொரு குழுவை தள்ளுதல் பற்றியும் கலந்துரையாடிடச் செய்தல்.
- இயக்கம், விசைப்பற்றி மாணவர்களைக் கலந்துரையாடல் செய்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாகப் பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- பக்கம் எண் 116ல் உள்ள இயக்கம் இருந்தால் (√) செய்க.
- பக்கம் 116ல் வகைப்படுத்துக.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

## வலுவூட்டுதல்

- இயக்கம், விசை என்பதையும், பொருள்கள் இழுக்கும் போது தள்ளும் போதும் முன்னும் பின்னும் நகர்கிறது என்பதை செயல் விளக்கத்துடன் விளக்குதல்.
- எளிய வினாக்கள் கேட்டு மீண்டும் பாடப் பகுதியை வலுவூட்டுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும்

பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

## வீட்டுப்பாடம்

- அன்றாட வாழ்வில் நீ காணும் தள்ளுதல் இழுத்தல் செயல்களைக் கலந்துரையாடி எழுதுக.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




## மதிப்பிடுதல்:

- தயிர் கடைதலில் நடைபெறும் செயல் எவ்வகையைச் சார்ந்தது?
- எந்தச் செயலால் கட்டுமரம் நகரும்?
- மேசையை முன்னோக்கி நகர்த்த என்ன செய்யலாம்?
- உன் வீட்டுக் கதவைத் திறக்கும் போது என்ன செயல் நடைபெறுகிறது?
- கிணற்றிலிருந்து நீரை எடுக்க என்ன செய்யலாம்.?

என்பன போன்ற எளிய மற்றும் சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பீடு செய்யலாம்.

பாடம் 3.2

# விசை

## கற்றலின் விளைவுகள்:

- விசையின் வெவ்வேறு வகைகளை அறிதல்.
- விசையின் விளைவுகளைக் கற்றல்.
- உராய்வு விசையின் தேவை மற்றும் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளுதல்.

## துணைக்கருவிகள்:

- மின்னட்டை, விசைகள் விளக்கப்படங்கள், ஆப்பிள் முதலியன.

# ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

## ஆயத்தப்படுத்துதல்

பிடிச்சிருக்கு நிறைய பிடிச்சிருக்கு
விசைகள் எனக்கு பிடிச்சிருக்கு
பிடிச்சிருக்கு நிறைய பிடிச்சிருக்கு
தொடு விசை எனக்கு பிடிச்சிருக்கு
பிடிச்சிருக்கு நிறை பிடிச்சிருக்கு
தொடா விசையும் எனக்கு பிடிச்சிருக்கு
என்ற பாடல் மூலம் ஆயத்தப்படுதல்.
முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத் தொடர்பான பாடல் பாடி, வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

## கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- பக்கம் எண் 119ல் தொடு விசை, தொடா விசை செய்து காட்டல் மூலம் மாணவர்களுக்கு விளக்குதல்
- விசைகளின் பல்வேறு வகைகளை மாணவர்களுக்கு உற்றுநோக்கல் மற்றும் கலந்துரையாடல் மூலம் விளக்குதல்.

# ✦ மாணவர் செயல்பாடுகள்:

## குழுச் செயல்பாடுகள்

- பக்கம் 119ல் உள்ள விசையின் வகைகளை இரு குழுவாக பிரித்து தொடு விசை, தொடா விசை கலந்துரையாடல் செய்தல்.
- பக்கம் 121 சுண்டாட்டம் விளையாடுவதற்கு முன் சுண்டாட்டப் பலகையின் மீது மென்பொடியைத் தூவவது ஏன்? என்பதைப் பற்றி மாணவர்களை கலந்துரையாடச் செய்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாகப் பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- பக்கம் 120ல் உள்ள விசை செயல்படும் படங்களுக்கு (√) செய்க.
- பக்கம் 121ல் உள்ள வகைப்படுத்துக.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்துகொண்ட கருத்தைக் கூறச் செய்யலாம்.

## வலுவூட்டுதல்

- விசையின் வகைகள் மீண்டும் விளக்குதல். உராய்வு எவ்வாறு ஏற்படுகிறது என்பதையும் விளக்குதல்.
- எளிய வினாக்கள் கேட்டு மீண்டும் பாடப் பகுதியை வலுவூட்டுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனைத் தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

## வீட்டுப்பாடம்

- பந்து, கல், காகிதம், இலை ஆகியவற்றை ராஜா மேல்நோக்கி எறிகிறான். அவற்றிற்கு என்ன நிகழும்? இங்கு எவ்வகை விசை செயல்படுகிறது என்பதைப் பற்றி எழுதி வரச் சொல்லுதல்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்

**விசையின் வகைகள்**

- தொடு விசை
  - 1. தசை நார் விசை
  - 2. எந்திர விசை
  - 3. உராய்வு விசை
- தொடா விசை
  - புவியீர்ப்பு விசை
  - காந்த விசை

### மதிப்பிடுதல்:

- ➢ விசையின் வகைகளை விளக்குக.
- ➢ புவியீர்ப்பு விசை - குறிப்பு எழுதுக.
- ➢ உராய்வு பற்றி சிறு குறிப்பு வரைக.
- ➢ காந்த விசை என்றால் என்ன?
- ➢ மரத்திலிருந்து பழம் கீழே விழக் காரணம் என்ன?

என்பன போன்ற எளிய மற்றும் சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பீடு செய்யலாம்.

பாடத்திட்டக் கையேடு

பாடம் 4.1

# அன்றாட வாழ்வில் அறிவியல்

## கற்றலின் விளைவுகள்:

- அன்றாட வாழ்வில் அறிவியல் தத்துவங்கள் பற்றிய அறிவைப் பெறுதல்.
- கொதிநிலை பற்றி அறிந்து கொள்ளுதல்.

## துணைக்கருவிகள்:

- உண்மைப் பொருள்கள் (அரிசி, உளுந்து, உப்பு, வெந்தயம்) மின்னட்டை முதலியன.

## ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

**இட்டலி அம்மா இட்டலி**
**அம்மா சுட்ட இட்டலி**
**அப்பாவிற்கு நான்கு**
**அம்மாவிற்கு மூன்று**
**அண்ணனிற்கு இரண்டு**
**எனக்கு இரண்டு.**

- என்பது போன்ற முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத் தொடர்பான பாடல் பாடி, வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- சமையலறையில் அறிவியலை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதை கலந்துரையாடல் முறையில் விளக்குதல்.
- வீட்டில் சாதம் எவ்வாறு செய்கிறோம் என்பது போன்ற பல எடுத்துக்காட்டுகளைக் கூறி கொதி நிலைப் பற்றி விவரித்தல்.
- உண்மைப் பொருள்கள் கொண்டு இட்டலி தயாரிக்கும் முறையில் உற்றுநோக்கல் முறையில் கற்பித்தல்

# ✦ மாணவர் செயல்பாடுகள்:

## குழுச் செயல்பாடுகள்

- பக்கம் 116ல் உள்ள சிந்திப்போமா?
- நீரை கொதிக்க வைத்தலின் நன்மைகளை மாணவர்களை இரு குழுவாகப் பிரித்துக் கூற வைத்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாகப் பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- பக்கம் 126ல் நீராவி முறையில் சமைக்கப்படும் உணவுப் பொருள்களுக்கு (√) குறிப்பிடுக.
- பக்கம் 127ல் இட்டலி தயாரிக்கும் படி நிலையை வரிசைப் படுத்துக.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

## வலுவூட்டுதல்

- சத்துணவு சமைக்கும் அறையில் நீர் எவ்வாறு கொதிநிலை அடைகிறது என்பது தூரத்தில் இருந்து காண்பித்து வலுவூட்டுதல்.
- எளிய வினாக்கள் கேட்டு மீண்டும் பாடப் பகுதியை வலுவூட்டுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

## வீட்டுப்பாடம்

- பக்கம் 134 இட்டலி உருவாக்கத் தேவையான பொருள்களை வட்டமிடுக

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்







### மதிப்பிடுதல்:

➢ கொதிக்க வைத்து சமைக்கும் பொருள்களை அட்டவணைப்படுத்துக.

➢ உணவு உட்கொள்ளும் போது __________ மண்டலம் வேலை செய்கிறது.

➢ பல வகை இட்டலிகளின் பெயர்களைக் கூறுக.

என்பன போன்ற எளிய மற்றும் சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பீடு செய்யலாம்.

பாடம் 4.2

# அன்றாட வாழ்வில் அறிவியல்

### கற்றலின் விளைவுகள்:

- சமையலறையில் உள்ள அறிவியலை உற்றுநோக்குதல்.
- வீட்டு உபயோகச் சாதனங்களை பற்றி அறிந்து கொள்ளுதல்.
- அழுத்த சமையற்கலனில் உள்ள அறிவியலை அறிதல்.

### துணைக்கருவிகள்:

- அழுத்த சமையற்கலன், வீட்டு உபயோகச் சாதனங்கள் கொண்ட படங்கள், மின்னட்டை முதலியன.

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- மின் அடுப்பு, வாயு அடுப்பு, கலப்பி போன்ற படங்களின் மின்னட்டைகளை கொடுந்து அதைப் பற்றிக் கூறச் செய்தல்.
- முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத் தொடர்பான பாடல் பாடி, வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- அழுத்த சமையற்கலனில் எவ்வாறு சமையல் சமைக்கப் படுகிறது என்பதை விவரித்தல்.
- அழுத்த சமையற்கலனின் நன்மைகள் குறித்து எளிய முறையில் விளக்குதல்.
- வீட்டு உபயோகப் சாதனங்களின் படங்களைக் காண்பித்து அதன் பயன்களை விளக்கிக் கூறுதல்

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து வீட்டு உபயோகச் சாதனங்கள் மற்றும் அதன் நன்மைகள் பற்றி கலந்துரையாடச் செய்யலாம்.
- உன் வீட்டில் உள்ள பொருள்கள் எவை உன் நண்பன் வீட்டில் உள்ள பொருள்கள் எவை? எவ்வாறு பயன்படுகிறது என்பதை கலந்துரையாடல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாகப் பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- பக்கம் எண் 129ல் உள்ள பொருத்துக.
- பக்கம் 130ல் உள்ள பொருள்களுக்கு வண்ணம் தீட்டி எண்ணி எழுதுக.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- அழுத்த சமையற்கலன் பற்றியும் வீட்டு உபயோகச் சாதனங்கள் பற்றியும் மீண்டும் தெளிவாகக் கூறுதல்.
- எளிய வினாக்கள் கேட்டு மீண்டும் பாடப் பகுதியை வலுவூட்டுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

### வீட்டுப்பாடம்

- அழுத்த சமையற்கலனின் நன்மைகளை எழுதி வருக. அவற்றில் எவையெல்லாம் சமைக்கலாம் என்பதை அறிந்து வருக

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்

**வீட்டு உபயோகச் சாதனங்கள்**

| சாதனம் | பயன் |
| --- | --- |
| அழுத்த சமையற்கலன் | நேரத்தைக் குறைத்தல் |
| வாயு அடுப்பு | கட்டுப்படுத்தப்பட்ட வெப்பம் |
| கலப்பி | அரைக்க |
| அரைக்கும் இயந்திரம் | மாவு அரைக்க |
| கொதி கெண்டி | காபி, தண்ணீர் சுட வைக்க |
| மின் அடுப்பு | உணவு சமைக்க |
| குளிர்சாதனப் பெட்டி | கெட்டு போகாமல் வைக்க |

### மதிப்பிடுதல்:

- சட்னி அரைக்க எது பயன்படும்?
- வாயு அடுப்பு எதற்கு பயன்படுகிறது?
- தண்ணீரை சூடுசெய்ய தேவைப்படும் சாதனம் எது?
- வீட்டு உபயோக சாதனங்கள் நான்கு எழுதுக?
- அழுத்த சமையற்கலனின் நன்மைகள் யாவை?

என்பன போன்ற எளிய மற்றும் சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பீடு செய்யலாம்

பாடத்திட்டக் கையேடு

பாடம் 4.3

# அன்றாட வாழ்வில் அறிவியல்

## கற்றலின் விளைவுகள்:

- சமைக்கும் பொருட்களில் மருத்துவத்தின் முக்கியத்தவத்தை அறிந்து கொள்ளுதல்.
- வெப்பநிலைமானிப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- நிழல் உருவாகும் விதத்தை அறிந்துகொள்ளுதல்.

## துணைக்கருவிகள்:

- பூண்டு, இஞ்சி, மஞ்சள், மிளகு, இலவங்கம் போன்ற உண்மைப் பொருள்கள், மெழுகுவர்த்தி, பொம்மை கொத்தமல்லி தேனீர் தயாரிக்கும் பொருள்கள், சுழலட்டை

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

## ஆயத்தப்படுத்துதல்

உருவில் பலவகை பொருள்களாம்
ஊரை இழுக்கும் வாசனையாம்
மருத்துவ குணங்கள் நிறைந்ததாம்
மண்ணில், செடியில், கொடிகளிலும்
பட்டை, கிராம்பு, ஏலக்காய்,
சீரகம், சோம்பு, ஜாதிக்காய்,
மல்லி, மிளகு, இஞ்சியுமே
செழித்து வளரும் பொருள்களாம்
சென்று நாமும் வாங்கலாம்

- போன்ற முன் வகுப்பு பாடப்பகுதிகளில் உள்ள பாடத் தொடர்பான பாடல் பாடி, வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்..

## கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- சமையலறையில் மருத்துவத்தின் முக்கியத்துவத்தை உண்மைப் பொருள்கள் காண்பித்து உற்றுநோக்கல் முறையில் கற்பித்தல்.
- கொத்தமல்லி தேனீர் எவ்வாறு செய்கிறார்கள் என்பதை செய்து காட்டி கற்பித்தல்.
- நிழல் உருவாகும் விதத்தை உற்றுநோக்கல் முறையில் கற்பித்தல்.
- வெப்பநிலை என்றால் என்ன என்பதையும், அது எவ்வாறு பயன்படுகிறது என்பதை கண்டறிந்தவர் பற்றியும் சுழலட்டை பயன்படுத்தி விளக்குதல்.

# ✦ மாணவர் செயல்பாடுகள்:

## குழுச் செயல்பாடுகள்

- பக்கம் 132ல் உள்ள நிஜம் மற்றும் நிழல் - மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செய்யச் சொல்லுதல்.
- பக்கம் 132ல் கோப்பையில் எரிமலைக் குழம்பு மாணவர்களை இரு குழுவாகப் பிரித்துச் செய்ய வைத்தல்.
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாகப் பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- மருத்துவ குணம் கொண்ட சமையலறைப் பொருள்களை எழுதுக.
- பக்கம் 134ல் உள்ள படத்தில் கொடுக்கப்பட்ட வெப்ப நிலைக்கேற்ப வெப்பநிலைமானியில் வண்ணமிடவும்.

## வலுவூட்டுதல்

- சமையலறை மருத்துவப் பொருள்கள், வெப்பநிலைமானி வரைந்து வண்ணம் தீட்டுதல்.
- எளிய வினாக்கள் கேட்டு மீண்டும் பாடப் பகுதியை வலுவூட்டுதல்.
- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனைத் தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

## வீட்டுப்பாடம்

- உன் வீட்டில் உள்ள மருத்துவ குணம் கொண்டப் பொருள்களை எழுதி வருக.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

## கருத்து வரைபடம்




**சமையலறை மருத்துவப் பொருள்கள்**

## மதிப்பிடுதல்:

- நீரின் கொதிநிலை ____________.
- சளி இருமல், தொண்டைப்புண் சரியாக ______________ பயன்படுகிறது.
- பிரகாசமான ஒளியில் நிழல் _____________ இருக்கும்.
- உடலின் வெப்பநிலை அறிய ______________ பயன்படுகிறது.
- கொத்தமல்லியில் உள்ள சத்துகள் ______________.

என்பன போன்ற எளிய மற்றும் சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பீடு செய்யலாம்.



பாடத்திட்டக் கையேடு

# சமூக அறிவியல்

பாடம் 1.1

பாடத்திட்டக் கையேடு

# குடும்பம்

## கற்றலின் விளைவுகள்:

- குடும்பத்தைப் பற்றி அறிதல்
- தனி நபர், குடும்பம், சமூதாயம் பற்றி புரிந்து கொள்ளல்
- மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள் பற்றிய பன்முகத்தன்மையை அறிதல்

## துணைக்கருவிகள்:

- சொல்லட்டை, வரைபட அட்டை, சுழலட்டை.
- QR Code களின் வீடியோக்களைப் பார்த்து மகிழ கணினி இணைப்பு.
- மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப மற்றும் பல துணைக்கருவிகள்

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- மாணவர்களிடம் அவரவர்களின் தாத்தா, பாட்டி, சித்தப்பா, சித்தி, மாமா, அத்தை போன்ற உறவுகாரர்களின் பெயர்களைக் கூறச்செய்யவும்.
- இதுபோன்ற பாடக்கருத்தோடு தொடர்புடைய வினாக்கேட்டு மாணவர்களை ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- பக்கம் எண்: 138 – 140 – இல் உள்ள கலந்துரையாடலை வாசித்துக்காண்பித்தல்.
- குடும்பம் பற்றிய கருத்துக்களைக் கூறலாம்.
- படம் 141 இல் உள்ள கருத்தை விளக்கலாம்.

- பக்கம் : 143 – இல் உள்ள " நமது குடும்பம்" என்ற தலைப்பில் உள்ள பாடக்கருத்தை விளக்கி எடுத்துரைக்கலாம்.
- தேவையெனில் மீண்டும் மீண்டும் வாசித்தும் காட்டலாம்.
- தொடர்ச்சியாக மாணவர்களைப் பின்தொடரச்செய்தல்.

## ✦மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- பக்கம் எண் ; 138-142 – ல் உள்ள " கலந்துரையாடலை குழுவாகப் பிரித்து படித்தோ, பேசியோ காட்டச் சொல்லலாம்.
- குழுவாகப் பிரித்து உறவுகளில் தாய்வழி உறவுமுறை – தந்தை வழி உறவுமுறை பற்றி கூறச்செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- பக்கம் எண்; 144 – ல் உள்ள "குடும்ப மரம்" என்னும் பகுதியில் உள்ளவற்றையும் செய்ய வைக்கலாம்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்துகொண்ட கருத்தைக் கூறச் செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனைத் தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

### வீட்டுப்பாடம்

- பக்கம் 145 இல் உள்ள நாம் எழுதுவோம் என்ற தலைப்பில் உள்ளவற்றை எழுதி வரச் சொல்லலாம்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### தொகுத்தல்

**குடும்பம்**

- ➢ விலங்குகள், பறவைகள் என அனைத்தும் குடும்பங்களுடன் கூடி வாழ்கின்றன.
- ➢ மனிதர்களும் குடும்பங்களாகச் சேர்ந்து வாழ்கின்றான்.
- ➢ பல குடும்பங்கள் சேர்ந்து சமுதாயத்தை உருவாக்குகின்றன.
- ➢ மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள் போன்ற பன்முகத்தன்மை உடன் உலகத்தில் மக்கள் குடும்பங்களாக வாழ்கின்றனர்.
- ➢ உறவுகள், தாய்வழி உறவுகள் – தந்தைவழி உறவுகள் என இருவகைப்படும்.

### மதிப்பிடுதல்:

பக்கம் எண் : 152 153 – ல் உள்ள “ மதிப்பீடு“ என்னும் தலைப்பில் உள்ள செயல்பாடுகளை மதிப்பிட பயன்படுத்திக் கொள்ளலாம்.

**மேலும்**

- ➢ தனிநபர் என்பது யார்?
- ➢ பல குடும்பங்கள் சேர்ந்து ____________ உருவாக்குகின்றன.
- ➢ தாய்வழி உறவுமுறை பற்றி கூறு?

போன்ற எளிய – சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 1.2

# குடும்பம்

## கற்றலின் விளைவுகள்:

- குடும்ப வகைகளை பற்றி அறிதல்
- உறவு – சமுதாயம் பற்றிய வேறுபாடுகள் புரிந்து கொள்ளல்.
- குடும்பம் பாதுகாப்பு அளிக்கிறது என்பதனைப் புரிந்து கொள்ளல்.
- கற்றல் விளைவுகள் :

## துணைக்கருவிகள்:

- சொல்லட்டை, வரைபட அட்டை, சுழலட்டை, சிறுவர் இதழ்.
- QR Code களின் வீடியோக்களைப் பார்த்து மகிழ கணினி இணைப்பு.
- மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப மற்றும் பல துணைக்கருவிகள்

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- மாணவர்களிடம் அவரவர்களின் தாய்வழி உறவுக்காரர்கள், தந்தைவழி உறவுக்காரர்களின் பெயர்களைக் கூறச்செய்யவும்.
- இதுபோன்ற பாடத்தோடு தொடர்புடைய வினாக்கேட்டு மாணவர்களை ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- பக்கம் எண்: 146 – 151 –இல் உள்ள பாடக்கருத்தை வாசித்து காண்பித்தல்.
- பாடக்கருத்தை தொகுத்துக்கூறுதல்
- குடும்பவகைகள் பற்றிய கருத்துக்களைக் கூறலாம்.

- குடும்பத்தின் ஒற்றுமையை விளக்கலாம்.
- வெளியாட்கள், அண்டை வீட்டுகாரர், குடும்பத்தின் வரவு செலவு திட்டம் போன்ற பாடக்கருத்தை விளக்கி, எடுத்துரைக்கலாம்.
- தேவையெனில் மீண்டும் மீண்டும் வாசித்தும் காட்டலாம்.
- தொடர்ச்சியாக மாணவர்களைப் பின்தொடரச்செய்தல்.

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- பக்கம் எண் ; 147, 149 – ல் உள்ள "நாம் எழுதுவோம்" என்னும் பகுதியில் உள்ளவற்றையும் குழுவாகப் பிரித்து செய்யவைக்கலாம்.
- குழுவாகப் பிரித்து சிறிய குடும்பம் பெரிய குடும்பம், கூட்டுக்குடும்பம், பற்றி கூறச்செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- பக்கம் எண் ; 148 – பகுதியில் உள்ளவற்றையும் செய்யவைக்கலாம்.
- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து, புரிந்து கொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

### வீட்டுப்பாடம்

- பக்கம் 153 இல் உள்ள செயல் திட்டம் என்ற தலைப்பில் உள்ளவற்றை எழுதி வரச் சொல்லலாம்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்

**குடும்ப வகைகள்**

- சிறிய குடும்பம்
- பெரிய குடும்பம்
- கூட்டுக்குடும்பம்

### தொகுத்தல்

**குடும்பம்**

- தாய், தந்தை, குழந்தைகள் உள்ள குடும்பத்தைத் தனிக்குடும்பம் என்கிறோம்.
- தாய், தந்தை, குழந்தைகள் மற்றும் சில குடும்ப உறுப்பினர்கள் உள்ள குடும்பத்தை பெரிய குடும்பம் என்கிறோம்.
- இரண்டு அல்லது மூன்று தலைமுறை குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக கூடி வாழ்வதை கூட்டுக்குடும்பம் என்கிறோம்.
- குடும்பங்களுடன் கூடிவாழும்போது அன்பு, மரியாதை, பாதுகாப்பு, பகிர்ந்து கொள்ளல் போன்ற பண்புகள் இயல்பாகவே வளர்கிறது.
- வெளியாட்களிடம் கவனமாக நடந்து கொள்ளவேண்டும்.
- நமது வீட்டருகே பல குடும்பத்தினர் வசிக்கின்றனர், அவர்களை அண்டை வீட்டுக்காரர்கள் என அழைக்கிறோம்.
- எளிமையே நமது வாழ்வின் மிகச்சிறந்த கொள்கை.

## மதிப்பிடுதல்:

பக்கம் எண் : 152-153 – ல் உள்ள ‘‘மதிப்பீடு‘‘ என்னும் தலைப்பில் உள்ள செயல்பாடுகளை மதிப்பிட பயன்படுத்திக்கொள்ளலாம்.

**மேலும்**

- இரண்டு அல்லது மூன்று தலைமுறை குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக கூடிவாழ்வதை ______________________ என்கிறோம்.
- குடும்பங்களுடன் கூடிவாழும் போது என்னென்ன பண்புகள் இயல்பாகவே வளர்கிறது?
- குடும்பத்தின் வகைகள் யாவை ?

போன்ற எளிய – சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 2.1

# நமது நண்பர்கள்

## கற்றலின் விளைவுகள்:

- நமது நண்பர்கள் பற்றி அறிந்து கொள்ளுதல்
- அவர்களின் வேலையின் தன்மை பற்றி புரிந்து கொள்ளல்
- சமூக தொழிலாளர்களின் முக்கியத்துவத்தைப் பற்றி புரிந்து கொள்ளல்.

## துணைக்கருவிகள்:

- சொல்லட்டை, வரைபட அட்டை, சுழலட்டை, சிறுவர் இதழ்.
- QR Code களின் வீடியோக்களைப் பார்த்து மகிழ கணினி இணைப்பு.
- மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப மற்றும் பல துணைக்கருவிகள்

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- உனக்கு உடல்நிலை சரியில்லை என்றால் யாரிடம் செல்வாய்?
- உனக்கு வீடு கட்டுவதற்கு யாரை அணுகுவாய்?
- இது போன்ற பாடப்பகுதிகளில் உள்ள பாடத்தொடர்பான வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- மாணவர்களுக்கு பட அட்டைகள் – காணொளிகளைக் கொண்டு Page no : 154 – 160 தீயணைப்பு வீரர்கள், பொறியாளர்கள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றியும் அவர்களின் பணிகள் பற்றியும் விளக்குதல்
- மேலும் நமது நண்பர்கள் நடித்துக்காட்டி பாடக் கருத்துகளை விளக்குதல்

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- பக்கம் எண் ; 157 –ல் உள்ள “ செவிலியளர் கடமை” என்னும் பகுதியில் உள்ளவற்றையும் குழுவாகப் பிரித்து எழுதவைக்கலாம்.
- மாணவர்கள் குழுவாகப் பிரித்து தீயணைப்பு வீரர்கள், பொறியாளர்கள் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றியும் அவர்களின் பணிகள் பற்றி விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து அட்டைகளை காண்பித்து, புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.
- தனி தனியே நமது நண்பர்களில் உள்ள பணியாளர்கள் போன்று நடித்துக்காட்ட செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

### வீட்டுப்பாடம்

- உங்கள் பகுதியில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்களின் பெயர்களையும் பணிகளையும் பட்டியலிட்டு வர செய்தல்.
- நமது நண்பர்களின் படங்கள் சேகரித்து வர செய்தல்

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்

**நமது நண்பர்கள்**

- பொறியாளர்கள்
- தீயணைப்பு வீரர்கள்
- மருத்துவர்கள்
- செவிலியர்கள்

### தொகுத்தல்

**நமது நண்பர்கள்**

- தீயணைப்பு வீரர்கள் மக்களையும் உடமைகளையும் தீ விபத்திலிருந்து பாதுகாக்கின்றனர்.
- மருத்துவர்கள் – செவிலியர்கள் நம்மை நோய்களிருந்து குணமாக்குகின்றனர்.
- சாலைப் பணியாளர்களில் சாலைகள் போடப்படுகின்றன.
- பொறியாளர்கள் கட்டிடங்களை வடிவமைக்கின்றனர்.

### மதிப்பிடுதல்:

பக்கம் எண் : 166 – ல் உள்ள செயல்பாடுகளை மதிப்பிட பயன்படுத்திக்கொள்ளலாம்.

**மேலும்**

- முறையான சிகிச்சைக்கு முன் அளிப்பது ____________.
- தீவிபத்திலிருந்து காப்பாற்றுபவர் ____________.
- மருத்துவர்களின் பணிகள் யாவை?

போன்ற எளிய – சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

# நமது நண்பர்கள்

## கற்றலின் விளைவுகள்:

- நமது நண்பர்கள் பற்றி அறிந்து கொள்ளுதல்
- அவர்களின் வேலையின் தன்மை பற்றி புரிந்து கொள்ளல்
- சமூக தொழிலாளர்களின் முக்கியத்துவத்தைப் பற்றி புரிந்து கொள்ளல்.

## துணைக்கருவிகள்:

- சொல்லட்டை, வரைபட அட்டை, சுழலட்டை, சிறுவர் இதழ்.
- QR Code களின் வீடியோக்களைப் பார்த்து மகிழ கணினி இணைப்பு.
- மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப மற்றும் பல துணைக்கருவிகள்

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- நாம் உண்ணும் உணவை உற்பத்தி செய்து தருபவர்கள் யார்?
- உங்கள் பேருந்து பயணம் பற்றி கூறுங்கள்
- மக்களை பாதுகாப்பவர்கள் யார்?

இது போன்ற பாடப்பகுதிகளில் உள்ள பாடத்தொடர்பான வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- மாணவர்களுக்கு பட அட்டைகள் – காணொளிகளைக் கொண்டு Page no :161 – 165 விவசாயிகள் பணிகள் மற்றும் அவர்களின் முக்கியத்துவத்தை விளக்குதல்
- பத்திரிக்கை துணுக்குகள் மற்றும் காணொளிகளைக் கொண்டு காவலர்கள், போக்குவரத்து காவலர்கள், ஓட்டுனர்கள், நடத்துனர்கள், இராணுவன வீரர்கள் ஆசிரியர்கள் மற்றும்

நீதிபதிகள் பற்றி விளக்குதல்

- மேலும் நமது நண்பர்கள் நடித்துக்காட்டி பாடக் கருத்துகளை விளக்குதல்

## ✦மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- பக்கம் எண் : 161 –ல் உள்ள "நாம் எழுதுவோம்" என்னும் பகுதியில் உள்ளவற்றையும் குழுவாகப் பிரித்து செய்யவைக்கலாம்.
- குழுவாகப் பிரித்து காவலர்கள், போக்குவரத்து காவலர்கள், ஓட்டுனர்கள், நடத்துனர்கள், இராணுவ வீரர்கள் ஆசிரியர்கள் மற்றும் நீதிபதிகள் பற்றியும் அவர்களின் பணிகள் பற்றி விவாதித்து, சுருக்கமாகப் பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து பட அட்டைகளை காண்பித்து, புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.
- தனி தனியே நமது நண்பர்களில் உள்ள பணியாளர்கள் போன்று நடித்துக்காட்டசெய்யலாம்.

### வலுவூட்டுதல்

- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்து கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- பாடப்பகுதியில், புரிந்துகொள்ள சிரமம் ஏற்படும் பகுதியைக் கண்டறிந்து, அதனை தெளிவுபடுத்த QR Code காணொளிகள், படங்கள் போன்ற தொழிற்நுட்பங்களின் உதவியோடு வலுவூட்டலாம்.

### வீட்டுப்பாடம்

- உங்கள் பகுதியில் உள்ள காவலர்கள், போக்குவரத்து காவலர்கள், ஓட்டுனர்கள், நடத்துனர்கள், இராணுவன வீரர்கள் ஆசிரியர்கள் மற்றும் நீதிபதிகள் பெயர்களையும் பணிகளையும் பட்டியலிட்டு வர செய்தல்.
- நமது நண்பர்களின் படங்கள் சேகரித்து வர செய்தல்

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### தொகுத்தல்

**கல்யாணமாம் கல்யாணம்**

- இராணுவ வீரர்கள் நமது நாட்டைப் பாதுகாக்கின்றனர்
- நமக்காவும் நமது நாட்டிற்காவும் சேவை செய்யும் மக்களை எண்ணி பெருமை கொள்ள வேண்டும்
- விவசாயிகளிடமிருந்து நாம் உணைவப் பெறுகிறோம்.
- வாகனங்கைளக் கட்டுப்படுத்தி சரியான திசையில் செல்லுமாறு அறிவுறுத்துவார்
- ஆசிரியர்களின் பணி மாணவர்களுக்கு அறிவையும் ஒழுக்கத்தையும் போதித்து சிறந்த குடிமக்களாகத் திகழ உதவி புரிகிறார்கள்.

### மதிப்பிடுதல்:

பக்கம் எண் : 166 – ல் உள்ள செயல்பாடுகளை மதிப்பிட பயன்படுத்திக்கொள்ளலாம்.

**மேலும்**

- மக்கள் வழக்குகளுக்கு தீர்ப்பு சொல்லுபவர் ______________.
- நமக்கு அறிவை மேம்படுத்துபவர் ______________.
- நமக்கு சேவை புரிபவர்கள் சிலைரக் குறிப்பிடுக.

போன்ற எளிய – சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 3.1

# ஊராட்சி மன்றம்

## கற்றலின் விளைவுகள்:

- ஊராட்சி மன்றம் பற்றி அறிதல்.
- ஊராட்சி மன்றம் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தருகிறது என்பதை அறிதல்.

## துணைக்கருவிகள்:

- பட அட்டை, சுழலட்டை, பொருத்தட்டை பத்திரிக்கை துணுக்குகள்.
- QR Code களின் வீடியோக்களை பார்த்து மகிழ கணினி இணைப்பு.
- மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப மற்றும் பல துணைக்கருவிகள்

## ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- உங்களுக்கு தெருவிளக்கு, குடிநீர் மற்றும் சாலை போன்ற அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தது யார்?
- இதுபோன்று பாடத்தொடர்பான வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- பட அட்டைகள் மற்றும் காணொளிகளை பயன்படுத்தி ஊராட்சி மன்றம், அதன் அமைப்பு, பிரிவுகள் பற்றி விளக்குதல்
- ஊராட்சி மன்ற தேர்தல் செய்திகள் வந்த பத்திரிக்கை துணுக்குகள் கொண்டு ஊராட்சி மன்ற தேர்தல் பற்றியும் அதன் உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் பதவிக்காலம் பற்றி விளக்குதல்

# ✦மாணவர் செயல்பாடுகள்:

## குழுச் செயல்பாடுகள்

- பக்கம் எண் ; 172 –ல் உள்ள செயல்பாடு செய்தல்
- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து பட அட்டைகளை காண்பித்து, புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.
- புத்தகத்திலுள்ள பாடத்தை உரக்கவாசிக்க செய்யலாம்.

## வலுவூட்டுதல்

- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.
- மாதிரி தேர்தல் (குடவோலை முறையில்) நடத்துதல், உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தல், பணிகளை பிரித்து கொடுத்தல் இச்செயல்கள் மூலமும் வலுவூட்டுதல் செய்யலாம்.

## வீட்டுப்பாடம்

- உங்கள் கிராம பஞ்சாயத்தின் தலைவர் பெயர் என்ன ?
- உங்கள் கிராம பஞ்சாயத்தில் எத்தனை வார்டுகள் உள்ளன?
- உங்கள் கிராம பஞ்சாயத்து தலைவர்களின் பெயர்களை பட்டியலிடுக.

போன்ற வினாக்களுக்கு விடை எழுதி வரச் சொல்லலாம்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்




### தொகுத்தல்

**மூன்றடுக்கு முறை ஊராட்சி அமைப்பு**

- மாவட்ட அளவில் -- மாவட்ட ஊராட்சி (ஜில்லா பரிஷத்)
- வட்டார அளவில் -- ஊராட்சி ஒன்றியம் (பஞ்சாயத்து சமிதி)
- கிராம அளவில் --- கிராம ஊராட்சி

'கிராம சுயராஜ்' என்ற வார்த்தையை முதன்முதலில் மகாத்மா காந்தியால் அறிமுகபடுத்தபட்டது.

### மதிப்பிடுதல்:

பக்கம் எண் : 178 – ல் உள்ள "மதிப்பீடு" என்னும் தலைப்பில் உள்ள செயல்பாடுகளை மதிப்பிட பயன்படுத்திக்கொள்ளலாம்.

**மேலும்**

- கிராம சபை கூட்டம் எப்போது நடைபெறும்?
- உங்கள் கிராம பஞ்சாயத்தின் பெயர் என்ன?

போன்ற எளிய – சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 3.2

# ஊராட்சி மன்றம்

### கற்றலின் விளைவுகள்:

- கிராம சபையின் பணிகளை அறிதல்.
- உள்ளாட்சியைப் பற்றி அறிதல்.

### துணைக்கருவிகள்:

- பட அட்டை, சுழலட்டை, பொருத்தட்டை பத்திரிக்கை துணுக்குகள்
- QR Code களின் வீடியோக்களைப் பார்த்து மகிழ கணினி இணைப்பு.
- மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப மற்றும் பல துணைக்கருவிகள்

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- உங்கள் கிராம பஞ்சாயத்தின் தலைவர் பெயர் என்ன?
- கிராம சபை கூட்டம் எப்போது நடைபெறும்?

இதுபோன்று பாடத்தொடர்பான வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- பட அட்டைகள் மற்றும் காணொளிகளைப் பயன்படுத்தி ஊராட்சி மன்றத்தின் பணிகளை விளக்குதல்

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- குழுவாகப் பிரித்து விவாதித்து, சுருக்கமாகப் பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து பட அட்டைகளை காண்பித்து, புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.
- புத்தகத்திலுள்ள பாடத்தை உரக்கவாசிக்க செய்யலாம்.

## வலுவூட்டுதல்

- பாடக்கருத்துகளைத் தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.

## வீட்டுப்பாடம்

- உங்கள் கிராம பஞ்சாயத்தின் மூலம் உங்கள் ஊரில் நடைபெறும் பணிகளை பட்டியலிடுக
- உங்கள் வீட்டில் கட்டும் வரிகளை அறிந்து வருக போன்ற வினாக்களுக்கு விடை எழுதி வரச் சொல்லலாம்.

**உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்**

## கருத்து வரைபடம்



## தொகுத்தல்

**துணிந்தவர் வெற்றி கொள்வர்**

- குடிநீர், மின்சாரம் சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தருதல்.
- மரம் நடுதல், விளையாட்டு மைதானம் அமைத்தல், பூங்காக்கள் உருவாக்குதல் போன்ற தன்னார்வ பணிகள் செய்தல்.
- வீட்டு வரி, குடிநீர் வரி, சொத்து வரி போன்ற வரி வசூல் செய்தல்

## மதிப்பிடுதல்:

பக்கம் எண் : 37 – ல் உள்ள "மதிப்பீடு" என்னும் தலைப்பில் உள்ள செயல்பாடுகளை மதிப்பிட பயன்படுத்திக்கொள்ளலாம்.

**மேலும்**

- மூன்றடுக்கு பஞ்சாயத்து முறை என்றால் என்ன?
- கிராம பஞ்சாயத்தின் பணிகள் யாவை?

போன்ற எளிய – சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடத்திட்டக் கையேடு

பாடம் 4.1

# பாதுகாப்பு

### கற்றலின் விளைவுகள்:

- விபத்துகளை தவிர்ப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி அறிதல்.
- தீயிலிருந்து பாதுகாக்கும் முறைகள் பற்றி அறிதல்.

### துணைக்கருவிகள்:

- பட அட்டை, சுழலட்டை, பொருத்தட்டை பத்திரிக்கை துணுக்குகள்
- QR Code களின் வீடியோக்களைப் பார்த்து மகிழ கணினி இணைப்பு.
- மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப மற்றும் பல துணைக்கருவிகள்

## ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

### ஆயத்தப்படுத்துதல்

- விபத்துகள் பற்றிய கலந்துரையாடல் மற்றும் பாடத்தொடர்பான வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்தலாம்.

### கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- படத்தொகுப்பு மற்றும் காணொளிகள் கொண்டு விபத்திற்கான காரணங்களை விளகுதல்.
- தீயின் பயன்கள், பாதுகாப்பு முறைகள், தீவிபத்திற்கான காரணங்கள் பற்றி விரிவாக விளக்குதல்

## ✦ மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- மாணவர்களிடம் பத்திரிக்கைத் துணுக்குகளைக் கொடுத்து குழுவாகப் பிரித்து விவாதித்து விபத்திற்கான காரணங்களை

பட்டியலிட்டு சுருக்கமாகப் பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

## தனிநபர் செயல்பாடுகள்

- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து விபத்திற்கான காரணங்கள் தீவிபத்து பற்றி புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.
- புத்தகத்திலுள்ள பாடத்தை உரக்கவாசிக்க செய்யலாம்.

## வலுவூட்டுதல்

- பாடக்கருத்துகளை பட அட்டைகள் மற்றும் காணொளிகளைக் கொண்டு தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்து கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.

## வீட்டுப்பாடம்

- தீ நமக்கு எவ்வாறு உதவுகிறது ?
- தீ பிடித்தால் என்ன செய்ய வேண்டும்?

போன்ற வினாக்களுக்கு விடை எழுதி வரச் சொல்லலாம்.

**உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்**

## கருத்து வரைபடம்



## தொகுத்தல்

**விபத்திற்கான காரணங்கள்**

- அவசரம்
- கவனக்குறைவு
- விழிப்புணர்வு இன்மை
- வெறுப்பு
- முறையான பயிற்சி இன்மை
- பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாக பின்பற்றாமை

## மதிப்பிடுதல்:

- விபத்திற்கான காரணங்கள் யாவை?
- எவற்றின் மூலம் நமக்கு விபத்து ஏற்படுகின்றன?
- தீ விபத்து எப்படி ஏற்படுகின்றது?

போன்ற எளிய – சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் மூலம் மதிப்பிடலாம்.

பாடம் 4.2

# பாதுகாப்பு

## கற்றலின் விளைவுகள்:

- நீர் பாதுகாப்பு
- சாலை பாதுகாப்பு
- மின்சார பாதுகாப்பு பற்றி அறிதல்

## துணைக்கருவிகள்:

- பட அட்டை, சுழலட்டை, பொருத்தட்டை பத்திரிக்கைத் துணுக்குகள்
- QR Code களின் வீடியோக்களைப் பார்த்து மகிழ கணினி இணைப்பு.
- மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப மற்றும் பல துணைக்கருவிகள்

# ✦ ஆசிரியர் செயல்பாடுகள்:

## ஆயத்தப்படுத்துதல்

- விபத்திற்கான காரணங்கள் யாவை?
- தீ விபத்திற்கான காரணங்கள் யாவை?
- இது போன்ற முந்தைய பாட வினாக்கள் கேட்டு ஆயத்தப்படுத்துதல்

## கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்

- மாணவர்களுக்கு நீர் விபத்து மற்றும் மின்சார விபத்து பற்றியும் அவற்றுக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பற்றி காணொளி மற்றும் பட அட்டைகள் கொண்டு விளக்குதல்.
- சாலை குறியிடுகள் கொண்டு சாலை விதிகளை விளக்குதல்

## ✦மாணவர் செயல்பாடுகள்:

### குழுச் செயல்பாடுகள்

- மாணவர்களிடம் படஅட்டைகளை கொடுத்து குழுவாகப் பிரித்து விவாதித்து விபத்திற்கான காரணங்களையும் பாதுகாப்பு வழிமுறைகளையும் பட்டியலிட்டு, சுருக்கமாக பாடக்கருத்தை வழங்கச் செய்யலாம்.

### தனிநபர் செயல்பாடுகள்

- ஒவ்வொரு மாணவனையும் அழைத்து புரிந்துகொண்ட கருத்தை கூறச் செய்யலாம்.
- புத்தகத்திலுள்ள பாடத்தை உரக்கவாசிக்க செய்யலாம்.

### வலுவூட்டுதல்

- பாடக்கருத்துகளை பட அட்டைகள் மற்றும் காணொளிகளைக் கொண்டு தெளிவுபடுத்த மீண்டும் ஒருமுறை அனைத்துக் கருத்துகளையும் விளக்கிக் கூறலாம்.

### வீட்டுப்பாடம்

- சாலை பாதுகாப்பு வாசகங்கள் எழுதி வருதல்
- உங்கள் வீட்டில் செய்யப்படும் முதலுதவி பற்றி அறிந்து வருக

போன்ற வினாக்களுக்கு விடை எழுதி வரச் சொல்லலாம்.

## உங்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட சில தொகுப்புகள்

### கருத்து வரைபடம்

**சாலை விளக்கு (Traffic signal)**




### தொகுத்தல்

**நூலகம்**

- ➢ குளம் மற்றும் ஆற்றில் குளிப்பதற்கு நாம் பெரியவர்களுடன் செல்ல வேண்டும், நீச்சல் தெரிந்தால் மட்டுமே குளிக்க வேண்டும்
- ➢ மின் சாதனங்கள் கண்ணாடி மற்றும் கூர்மையான பொருட்களை கவனமாகவும் முன்னெச்சரிக்கையுடனும் கையாளுதல்
- ➢ சாலை விதிகளை முறையாக பின்பற்ற வேண்டும்

### மதிப்பிடுதல்:

நாம் எங்கு சாலையை கடக்க வேண்டும்

உனக்கு தெரிந்த சில விஷப்பூச்சிகளின் பெயர்களை கூறு.

மனவரைபடம்



# தமிழ்

# 1. தமிழ் அமுது

## கருத்து வரைபடம்



# 2. கண்ணன் செய்த உதவி

## கருத்து வரைபடம்



# 3. தனித்திறமை

## கருத்து வரைபடம்



# 4. கல்யாணமாம் கல்யாணம்

## கருத்து வரைபடம்



# 5. மாணவர்கள் நினைத்தால்

## கருத்து வரைபடம்



# 6. துணிந்தவர் வெற்றி கொள்வர்

## கருத்து வரைபடம்



# 7. சான்றோர் மொழி

## கருத்து வரைபடம்



# ௩.1. நூலகம்

## கருத்து வரைபடம்



# ௩.௨. நூலகம்

## கருத்து வரைபடம்



மனவரைபடம்



# ஆங்கிலம்

# 1.1. OUR KITCHEN

## Concept Map



# 1.2. OUR KITCHEN

## Concept Map



# 1.3. OUR KITCHEN

## Concept Map





# 2.1. THE INSECTS

## Concept Map



# 2.2. THE INSECTS

## Concept Map



# 2.3. THE INSECTS

## Concept Map



# 3.1. THE WORLD AROUND US

## Concept Map



# 3.2. THE WORLD AROUND US

## Concept Map



# 3.3. THE WORLD AROUND US

## Concept Map





மனவரைபடம்

# கணக்கு

# 1. வடிவியல்

## கருத்து வரைபடம்



# 2.1. NUMBERS

## Concept Map



# 2.2. NUMBERS

## Concept Map



# 2.3. NUMBERS

## Concept Map



# 3. PATTERNS

## Concept Map



# 4. MEASUREMENTS

## Concept Map



# 5. TIME

## Concept Map



# 6. INFORMATION PROCESSING

## Concept Map



மனவரைபடம்



# அறிவியல்

# 1.1. MY BODY

## Concept Map



# 1.2. MY BODY

## Concept Map



# 2.1. STATES OF MATTER

## Concept Map



# 2.2. STATES OF MATTER

## Concept Map



# 3.1. FORCE

## Concept Map



# 3.2. FORCE

## Concept Map



# 4.1. SCIENCE IN EVERYDAY LIFE

## Concept Map





# 4.2. SCIENCE IN EVERYDAY LIFE

## Concept Map



மனவரைபடம்

# சமூக அறிவியல்



# 1.1. FAMILY

## Concept Map



# 1.2. FAMILY

## Concept Map



# 2.1. OUR FRIENDS

## Concept Map



# 2.2. OUR FRIENDS



# 3.1. PANCHAYAT

## Concept Map



# 4.1. SAFETY

## Concept Map



# 4.2. SAFETY

## Concept Map

